Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 30, 2023

என் மௌனத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், என் வார்த்தைகளை எவ்வாறு புரிந்துகொள்வீர்கள் - தர்ம போதனை

புதன்கிழமை ஒகஸ்ட் 30, 2023 | ஒளி: 09 கதிர் 073 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

இராணுவத்திடம் கொடுத்த உறவுகளுக்கு

# “உயிர் இருக்கா? இல்லையா?”

**திண்டாட்டத்தின் மத்தியிலே போராடுகிறோம்**

**மன்னார் போராட்டத்துக்கு மரியசுரேஸ் ஈஸ்வரி அழைப்பு**

“பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு என்ன வேதனை என புரிந்து கொண்டால் மன்னாரில் இடம்பெறும் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தின போராட்டத்துக்கு அனைவரும் வருவீர்கள். நாங்கள் ஒவ்வொருவரையும் இராணுவத்திடம் கொடுத்து உயிர் இருக்கா? இல்லையா? என்ற திண்டாட்டத்தின் மத்தியில் தான் போராட்டத்தை மேற்கொள்கிறோம்” என்று முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் திங்கட்கிழமை (28) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2



## ஏற்றுமதி வருமானம் 2.18% ஆல் உயர்வு

ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி 2.18 சதவீதத்தால் அதாவது 1,027.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.


இலங்கை சுங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின் அடிப்படையில், ஜூன் மாதத்தை விட ஜூலை மாதத்தில் 2.18 சதவீதத்தால் வருமானம் அதிகரித்துள்ளதுடன், 2022ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், 11.79 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.



## 92.1 மில்லியன் முட்டைகளை கொள்வனவு செய்ய அனுமதி

இந்தியாவில் இருந்து எதிர்வரும் 03 மாதங்களுக்கு 92.1 மில்லியன் முட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



தொடர்ச்சி P2

பங்கரவாத எதிர்ப்பு

## சட்டமூலத்தை மீண்டும் தயாரிக்க அனுமதி

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலத்தில் திருத்தங்களை உள்வாங்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீண்டும் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு



தொடர்ச்சி P2

‘அஸ்வெசும’ விவகாரங்கள்

## 1924 க்கு அழைக்கவும்

689,803 அஸ்வெசும பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் 4.395 பில்லியன் ரூபாய் ஏற்கெனவே வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்ட 2 மில்லியன் அஸ்வெசும பயனாளிகளில், 1.5 மில்லியன் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணிகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

## இன்று திறப்பு

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாத்திரம் இன்றையதினம் (30) அரச வங்கிகள் திறக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அரச வங்கிகளுக்கு இன்று (30) விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் நலன்புரி கொடுப்பனவுக்காக மாத்திரம் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை அனைத்து அரச வங்கிக்கிளைகளும் திறக்கப்படவுள்ளன.



தொடர்ச்சி P2

## போதைக்கு அடிமையானவர் கிருமி தொற்றால் உயிரிழப்பு

எம்.றொசாந்த்

அதிகளவான ஹெரோயினை ஊசி மூலம் நுகர்ந்து வந்த யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் கிருமி தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குறித்த இளைஞர், திங்கட்கிழமை (28) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



தொடர்ச்சி P2

## அங்க பிரதட்சணம் செய்தவர் மரணம்



எஸ் தில்லைநாதன்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் அங்கப் பிரதட்சணம் செய்த யாழ்ப்பாணம், நாவலர் வீதியை சேர்ந்த சின்னையா சுரேஷ்குமார் (வயது 57) என்பவர் உயிரிழந்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் திருவிழா காலத்தில் வழக்கமாக அங்கப் பிரதட்சணம் செய்து வரும் இவர், திருவிழா தொடங்கிய நாள்முதல் வழமை போன்று அவர் இந்த வருடமும் தினமும் அங்கப் பிரதட்சணம் செய்து வந்துள்ளார்.

தொடர்ச்சி P2


ராஜன் ராஜகுமாரி மரணம்

## பொலிஸ் உப-பரிசோதகருக்கு செப். 11 வரை விளக்கமறியல்

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் உயிரிழந்த ராஜன் ராஜகுமாரியின் மரணம் குறித்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வெலிக்கடை பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தமது வீட்டில் பணிபுரிந்த போது தங்க நகையை திருடியதாக தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரான சுதர்மா

தொடர்ச்சி P2



## வெளிநாட்டுப் பயணங்களை தவிர்க்குமாறு அறிவித்தல்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5, 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு விசேட அறிவித்தல் விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள முதலாவது

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்:

## திருச்சபைக்கு முழுமையான அறிக்கை வழங்க நடவடிக்கை

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையும் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பெண்ணின் மூளையில் உயிருடன் இருந்த புழு

அவுஸ்திரேலிய பெண்ணின் மூளைக்குள் உயிருடன் இருந்த 8 சென்ரி மீற்றர் நீளம் உள்ள ஒட்டுண்ணி புழுவை மருத்துவர்கள் அகற்றி உள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தி உள்ளது.



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 64 வயது பெண்மணி நிமோனியா, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு,

தொடர்ச்சி P2

## 20 நாடுகளில் இலங்கையை முன்மாதிரியாக கொள்க

### ஐ.நா வதிவிட பிரதிநிதி பாராட்டு

அண்மைக்காலத்தில் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த உலகின் 20 நாடுகளில் விரைவில் மீண்டு வந்த நாடான இலங்கையை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்ட்ரே பிரான்சே, கடந்த வருடத்தில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை பாராட்டினார்.

தொடர்ச்சி P2



தமிழர் விரோத நடவடிக்கைக்கு

## சர்வதேச சமூகம் கடிவாளமிட வேண்டும்

நிதர்ஷன் வினோத்

13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த இனவாதப் போராட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன்,

தொடர்ச்சி P2

## இடைக்கால கொடுப்பனவுக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான இடைக்கால கொடுப்பனவை பெறுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை அந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, இரு தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

இடைக்கால இழப்பீட்டை வழங்குவதற்கு கப்பல் நிறுவன காப்புறுதி நிறுவனமும் சட்டத்தரணிகள் நிறுவனமும் ஏற்கெனவே இணக்கம் தெரிவித்திருந்தன.



தொடர்ச்சி P2

# “உயிர் இருக்கா? இல்லையா?”

“முல்லைத்தீவு மாவட்டத்திலே தொடர்ச்சியாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளது போராட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் வேளையில் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சியாக காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் போராட்டத்தை மேற்கொண்டு எமது உறவுகள் இதுவரை கிடைக்கவில்லை , எங்களுக்கான நீதி வேண்டும் என சர்வதேசத்துக்கு காட்டி வருகின்றோம்.

இந்த வருடம் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தை பல மடங்காக எதிர்பார்த்து இருக்கின்றோம். பல்வேறு அழுத்தங்கள், சர்வதேசத்திற்கு குரல் கொடுக்க முடியாத நிலை , சர்வதேசத்திடம் நீதி கேட்க முடியாத நிலைப்பாடு இவ்வாறு பலதரப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகிறது.

இவற்றுக்கு மத்தியில் இவ்வருடம் எமது உறவுகளை நினைவுகூறி எமது உறவுகள் எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதையும் பலமாக கொண்டு மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை மன்னார் மாவட்டத்திலே மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

ஏனென்றால் அங்கும் ஓர் புதைகுழி உள்ளது. புதைகுழி தோண்டப்பட்டு சரியான நீதியும் கிடைக்கப்பெறாத பட்சத்தில் இந்த ஆண்டு நாங்கள் எல்லோரும் சேர்ந்து போராட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தரப்பாக நாங்கள் வீதிகளில் நின்று போராடுவது சிலருக்கு வேடிக்கையாகவும் , நகைச்சுவையாகவும் இருப்பது மனவருத்தத்திற்குரிய விடயம்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு என்ன வேதனை என புரிந்து கொண்டால் அனைவரும் குறித்த போராட்டத்துக்கு வருவீர்கள். நாங்கள் ஒவ்வொருவரையும் இராணுவத்திடம் கொடுத்து உயிர் இருக்கா? இல்லையா? என்ற திண்டாட்டத்தின் மத்தியில் தான் போராட்டத்தை மேற்கொள்கிறோம்.

பணத்துக்காகவோ, ஆதரவுக்காகவோ இல்லை எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக தான் கண்ணீர் வடித்து கண்ணீருடன் தான் போராடி கொண்டிருக்கின்றோம்.

அனைவரும் சேர்ந்து குறித்த போராட்டத்திற்கு வர வேண்டும் என கேட்பதோடு 30 ஆம் திகதி போராட்டத்திற்கு செல்ல வேண்டிய வாகன ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிலாவத்தை, விசுவமடு , மாங்குளம் ஆகிய இடங்களில் இருந்து காலை 6 மணிக்கு பஸ்கள் புறப்பட உள்ளன.

அத்தோடு குறித்த போராட்டமானது ஓஎம்பி அலுவலகத்திற்கு எதிரான போராட்டமாகும் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளது போராட்டம் இருக்கும் என்பதோடு தேசியத்திற்கு பயணிக்கும் அனைத்து உறவுகளையும் போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு கேட்டு கொள்கிறோம்” என மேலும் தெரிவித்தார்.

# திருச்சபைக்கு முழுமையான அறிக்கை வழங்க நடவடிக்கை

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களம் தற்போது அரசியல் தலையீடற்ற நிறுவனமாக இயங்குகின்றது என்றும், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின்போது, அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதைத் தடுத்துள்ளதுடன், கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரி சேவைகள் பலவற்றை தற்போது நடைமுறைப்படுத்தி வருவதாகவும் கூறினார்.

தற்போது பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதுடன், அவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்வதோடு, குறிப்பாக போதைப்பொருள் தொடர்பாக இடம்பெறும் மோதல்களே இவ்வாறு அவர்கள் குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைவதாகவும் குறிப்பிட்டார்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நாட்டில் பாதாள உலக செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது இணையவழி ஊடாக கடவுச் சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களுக்கு செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை நவீனமயப்படுத்த அவசியமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது என்று குறிப்பிட்ட அமைச்சர், இந்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# இன்று திறப்பு

நிதி வழங்கல் தொடர்பான அனைத்து தொழில்நுட்ப பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக அமைச்சின் அதிகாரிகளுக்கும் அரச வங்கி அதிகாரிகளுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை (29) விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

15 இலட்சம் பயனாளிகளில் முதற்கட்டமாக 8 இலட்சம் பயனாளிகளுக்கு ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவு திங்கட்கிழமை (28) அரச வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகக்து.

# பெண்ணின் மூளையில் உயிருடன் இருந்த புழு

வறட்டு இருமல், காய்ச்சல் போன்ற நோய்களுக்காக சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து வைத்தியம் பார்த்து வந்தும் அவருக்கு உடல்நிலை சரியாகவில்லை. அதனைத் தொடர்ந்து அவருக்கு ஞாபக மறதியும் மன அழுத்தமும் ஏற்பட்டுள்ளது.

இதனால், அவரின் தலையை எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்து பார்த்த போது பரிசோதனை அறிக்கையைப் பார்த்த வைத்தியர்கள் அவருக்கு மூளை அறுவை சிகிச்சை செய்துள்ளனர். அப்போது, அவரின் மூளையில் 8 செ.மீ நீளம் உள்ள ஒட்டுண்ணி புழு உயிருடன் இருந்துள்ளது.

அது ஓபிடாஸ்காரிஸ் ராபர்ட்ஸி என்ற இனத்தைச் சேர்ந்த உருண்டைப் புழுவாகும். அவை அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, பப்புவா நியூ கினி போன்ற பிரதேசங்களில் வாழக்கூடியவை மலைப்பாம்புகளின் வயிற்றுக்குள் மட்டுமே இந்த வகையான புழு உள்ளது என்கிறனர்.

மனித மூளைக்குள் பாம்புகளின் ஒட்டுண்ணி கண்டறியப்படுவது இதுவே முதல்தடவை எனத் தெரிவித்த வைத்தியர்கள், அந்த பெண்ணின் மூளைக்குள் அந்த ஒட்டுண்ணி புழு எப்படி வந்திருக்கும் ஆய்வு செய்ததில், அதன் பெண் சாப்பிட்ட உணவில் எதிலாவது, புழுவின் முட்டை இருந்திருக்கலாம் எனவும் அதையும் அந்தப் பெண் சேர்த்து அவர் சாப்பிட்டிருக்கக்கூடும் எனவும் அதுதான் இந்த பிரச்சினைக்கு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

# ஏற்றுமதி வருமானம் 2.18% ஆல் உயர்வு

ஆடை, துணி மற்றும் இறப்பர் உள்ளிட்ட தயாரிப்புகள் மற்றும் தென்னை சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கான கேள்வி குறைந்தமை கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் ஏற்பட்ட ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு காரணமாகும் என்று தெரியவருகிறது.

# போதைக்கு அடிமையானவர் கிருமி தொற்றால் உயிரிழப்பு

வைத்திய பரிசோதனையில் அவர் கிருமி தொற்றுக்கு உள்ளாகி இருப்பதும் போதைக்கு அடிமையானவர் என்பதனையும் வைத்தியர்கள் கண்டறிந்தனர்.

அதேவேளை இன்னுமொரு இளைஞனும் போதைக்கு அடிமையான நிலையில் , உடலில் கிருமி தொற்றுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 92.1 மில்லியன் முட்டைகளை கொள்வனவு செய்ய அனுமதி

அதற்கமைய, கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள 03 இந்தியக் கம்பனிகளிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளது.

குறித்த விலைமனுக்களின் அடிப்படையில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் எதிர்வரும் 03 மாதங்களுக்கு 92.1 மில்லியன் முட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்தும் நோக்கில் அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் முட்டைகளை இறக்குமதி செய்து உள்ளூர் சந்தைக்கு விநியோகிப்பதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

# 1924 க்கு அழைக்கவும்

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

‘அஸ்வெசும’ குறித்த அனைத்து விபரங்களையும் 1924 என்ற துரித தொலைபேசி எண் மூலம், வார நாட்களில் காலை 9 மணி முதல் 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

# சட்டமூலத்தை மீண்டும் தயாரிக்க அனுமதி

ஆலோசனை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் , இலக்க பங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஆலோசனை வழங்குவதற்காக அமைச்சரினால் யோசனை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுப் பயணங்களை தவிர்க்குமாறு அறிவித்தல்

பாராளுமன்றக் கூட்டத்தொடரின் போது நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் அவகாசம் தேவை என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கோரியதுடன் அதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

# அங்க பிரதட்சணம் செய்தவர் மரணம்

திங்கட்கிழமை (28) அங்கப் பிரதட்சணத்தை நிறைவு செய்த நிலையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். உடனடியாக அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா நடத்திய நிலையில், மாரடைப்பு காரணமாகவே மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# பொலிஸ் உப பரிசோதகருக்கு செப். 11 வரை விளக்கமறியல்

ஜயவர்தன வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய, கடந்த மே மாதம் 11 ஆம் திகதி 42 வயதான ஆர்.ராஜகுமாரி என்பவர் வெலிக்கடை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட தினத்தன்று இரவு ராஜகுமாரி வெலிக்கடை பொலிஸாரினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

இந்த நிலையில், உயிரிழந்த பெண்ணின் கணவர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து தனது மனைவியின் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்தமைக்கமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்அடிப்படையில், ராஜன் ராஜகுமாரி கூர்மையற்ற ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரியினால் கடந்த 25ஆம் திகதி மன்றுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச சமூகம் கடிவாளமிட வேண்டும்

சர்வதேச சமூகமும் குறிப்பாக இந்தியாவும் அரசாங்கத்தினதும் சிங்கள பௌத்த இனவாத சக்திகளினதும் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்குக் கடிவாளமிடவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் இலங்கையின் வடக்கிலும்-கிழக்கிலும், தெற்கிலும் தனது கோரமுகத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரசாங்கமும் ஜனாதிபதியும் கண்டும் காணாமலும் உள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனவாத செயல்களைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை (29) அவர் வெளியிட்ட அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை மாதம் 20ஆம் திகதி இந்தியப் பிரதமரின் அழைப்பின்பேரில் டெல்லி சென்றிருந் போது இந்திய-இலங்கை உறவு, பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் பேசப்பட்டதுடன், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தலை நடாத்துமாறும், அதற்கான அதிகாரங்களை பதின்மூன்றாவது திருத்தத்தின் ஊடாக முழுமையாக வழங்குமாறும் இந்திய பிரதமர் கூறியிருந்தார்.

கொழும்பு திரும்பிய ஜனாதிபதி இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நீண்டதொரு உரையையும் ஆற்றியிருந்தார். பாராளுமன்றத்தில் அவரது உரைக்கு கணிசமான அளவுக்கு எதிர்ப்பு இருந்ததுடன், சிங்கள பௌத்த இனவாத சக்திகள் அதனை முழுமையாக எதிர்த்தனர்.

இது ஒருபுறமிருக்க, வடக்கு-கிழக்கில் புதிய பௌத்த விகாரைகளை உருவாக்குவதிலும் சிங்கள மக்களை அங்கு குடியேற்றுவதிலும் சிங்கள பௌத்த துறவிகளும், தொல்பொருள் திணைக்களத்தினரும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இதற்கான தமிழ் மக்களின் எதிர்ப்புகளும் போராட்டங்களும் வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இந்த சூழ்நிலையில், பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த இனவாதப் போராட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் வங்குரோத்து நிலையில் இருக்கின்ற நிலையில், ஜனாதிபதி அவர்கள் ஒரு புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கும் முகங்கொடுக்க உள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில், அரசிற்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டங்களைத் திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்டும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் மேற்கண்ட போராட்டங்களுக்கு அரசு மறைமுக ஆதரவை வழங்குவதாகவே தோன்றுகின்றது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே, இலங்கையில் சிங்கள இனவாதத்தை முன்னிறுத்திய தமிழர் விரோத அரசியலே தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இலங்கை அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# 20 நாடுகளில் இலங்கையை முன்மாதிரியாக கொள்க

ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்தாபக உறுப்பு நாடான இலங்கையின் அனைத்து செயற்பாடுகளுக்கும் அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என்றும் ஐ.நா பொதுச்செயலாளரும் இதே கருத்தைக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

# இடைக்கால கொடுப்பனவுக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம்

தேவையான அறிவிப்புகள் கப்பலின் காப்புறுதி நிறுவனம் மற்றும் சட்டத்தரணி நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சமர்ப்பித்த இடைக்கால இழப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நட்டஈடாக 890 இலட்சம் டொலர் மற்றும் 16 மில்லியன் ரூபாய் கோரப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நீதியை பெற்றிட ஒன்றிணைவோம்

## மட்டக்களப்பு, மன்னார் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனா எம்.பி அழைப்பு

கனகராசா சரவணன்



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம், ஒகஸ்ட் 30ஆம் திகதியன்று உலகெங்கும் நினைவு கூரப்படுகின்ற நிலையில், வடக்கில் மன்னாரிலும், கிழக்கிலே மட்டக்களப்பிலும் இன்று 30ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் நீதிகோரி பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்படவுள்ளது.

கிழக்கில் வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறுவுகளினால் மட்டக்களப்பில் எதிர்வரும் 30ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் ஜனநாயக கூட்டமைப்பினர் முழு ஆதரவு வழங்குவதுடன் தேசியத்தின்பால் ஈர்ந்துள்ள அனைவரையும் இந்த ஆர்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள எம்.பியின் காரியாலயத்தில் திங்கட்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து குடும்ப உறவினர்களின் கைகளினால் இலங்கை பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என இதுவரை அரசாங்கங்கள் கூறவில்லை.

கடந்த 14 வருடங்களாக மாறிமாறி இந்த நாட்டை ஆண்டுவந்த ஆட்சியாளர்கள் இதற்கான பதிலை இதுவரை தெரிவிக்கவில்லை. அந்த வகையில் வடக்கில் மன்னாரிலும், கிழக்கிலே மட்டக்களப்பிலும் எதிர்வரும் 30ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் நீதிகோரி பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்படவுள்ளது.

எனவே இந்த போராட்டத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முழு ஆதரவையும் வழங்குவது மாத்திரமல்லாது, எமது உறவுகளுக்கான நீதியை பெற்றிட தேசியத்தின்பால் ஈர்ந்துள்ள அனைவரும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## ஆலயத்தின் தேர் திருவிழா

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீச்சரத்திற்கு அடுத்து பெரிய ஆலயமாக காணப்படும் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவத் திருவிழாவின் 14 நாள் தேர் திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் செவ்வாய்க்கிழமை(29) காலை 10 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றது.

றொசேரியன் லெம்பட்



## மகோற்சவ தீர்த்தத் திருவிழா

தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா செவ்வாய்க்கிழமை (29) காலை இடம்பெற்றது.

காலை 6 மணியளவில் கொடித்தம்ப பூசை இடம்பெற்றதைத் தொடர்ந்து 7.30 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்றது. வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து அம்பாள், பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரி சமேதராக துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் எழுந்தருளி தீர்த்தமாடினார். பு.கஜிந்தன்

## யாழ்ப்பாணத்தில் விபாசனா தியானப் பயிற்சி



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின் அவர்களிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த திரு ச. கோயங்கா அவர்களால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றி அறிமுகம்.

30ம் திகத புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியும், பிற்பகல் 3.00 மணிக்கு குருநகர் தொடர்மாடி சமூக மண்டபத்திலும் இவ் தியான முறை பற்றி அறிமுகம் செய்யப்படும்.

விபாசனா தியானப்பயிற்சியானது மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கும் அனைத்து இன்னல்களுக்கும் காரணமான கோபம், பொறாமை, தீய எண்ணம், வெறுப்பு, காமம் போன்றவைகளை நீக்கும் பயிற்சி ஆகும். இவ் தியானப்பயிற்சி மூலம் மனித வாழ்க்கையில் மனம், அன்பு, கருணை, நல்ல எண்ணம், பாலிரக்கம் நிறைந்ததாக மாறும் போது நமக்கும் நன்மை தருவதோடு, நம்மை சுற்றியுள்ள அனைவருடனும் ஒத்திசைவுடன் வாழும் அரிய பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தம்மசேது விபாசக மைய ஆசிரியர் அ.சுப்பிரமணியம் விபாசனா ஆசிரியர் ஆர். மோகன் (சென்னை) மற்றும் தம்ம திரிவேணி அறக்கட்டளை குழு உறுப்பினர் சரவணன் ஆகியோர் இந்த பயிற்சி நெறியை வழங்குகின்றனர். மனத்தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை, நாவலடி அறியாலை ஜன சமூக நிலையத்தில் 27ம் திகதியும், பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாண (Recca Road)) கலைதூது கலாமன்றத்திலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுறுத்திய மாணவன் கத்தியுடன் கைது

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் மாணவன் கத்தியுடன் திங்கட்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றுக்கு கத்தியுடன் சென்று வர்த்தக நிலையத்தில் வேலை செய்பவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மாணவனை கைது செய்துள்ளனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து , விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

எம்.றொசாந்த்

## மாவாவுடன் மாணவன் கைது

புகஜிந்தன்

யாழ்ப்பாணம் தீவகப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் மாவா போதை பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீவக குடியிருப்பு பகுதி ஒன்றில் வசிக்கும் குறித்த மாணவன் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றிய நிலையில் மாவா போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இந்நிலையில் குறித்த மாணவனை கைது செய்த ஊர்காவற்துறைப் பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## மலையகத்தில் ஆன்மீக அருளுரைகள்



மலையகத்தில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள்

தமிழ் நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் கேகாலை மாவட்டத்திலும், கொட்டகலை. ஹட்டன் ஆகிய பகுதிகளிலும் நடைபெற உள்ளது

அரனாயக தமிழ் ஆரம்ப பாடசாலையில் புதன்கிழமை (300 காலை 9.00 மணிக்கும். பூணுகல ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வியாழக்கிழமை (31) பிற்பகல் 2.00 மணிக்கும். வெள்ளிக்கிழமை (01ஃ9) பிற்பகல் 2.00 மணிக்கு கொட்டகல அறநெறி பாடசாலையிலும், சனிக்கிழமை (02ஃ9) காலை 9.00 மணிக்கு ஹட்டன், ஓம் ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தேவஸ்தானம், பன்மூர்பதியிலும், ஞாயிற்றுக்கிழமை (03ஃ9) காலை 9.00 மணிக்கு வரக்கபொல ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்திலும்;, பிற்பகல் 2.00 மணிக்கு அவிசாவளை அறநெறி பாடசாலையிலும், மற்றும் திங்கட்கிழமை (04ஃ9) பிற்பகல் 2.00 மணிக்கு ரூவான்வெல்ல அறநெறி பாடசாலையிலும்;; சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள் நடைபெறும்.

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் சுவாமி அவர்களின் காலை, மாலை நடைபெறும் இப் புனித நிகழ்வுகளில்; கலந்து கொண்டு இறையருள் பெறுவதோடு சுவாமிகளின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

யட்டியாந்தோட்டை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமையம் (27) எலிஸ்டன் தோட்ட சிவலிங்க பிரதிஷ்டையில் திங்கட்கிழமையும் (28) aட்டியாந்தோட்டை சாந்த மரியால் கல்லூரியிலும், கனேபல்ல ஸ்ரீ துர்க்க அறநெறி பாடசாலையிலும், செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எச். எச்.விக்கிரமசிங்க

## விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மரணம்

முறிகண்டிக்கும், இரணைமடு சந்திக்கும் இடையில் ஏ-9 வீதியில் கடந்த 25ம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கிளிநொச்சியிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பார ஊர்தியுடன் எதிராக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க முற்பட்ட மாட்டுக்கு இடம் கொடுத்து செல்ல முற்பட்ட வேளையில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த அவர், மேலதிக சிகிச்சைக்களுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (29) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செனவிரட்ன எனவும் அவருக்கு திருமணம் நடந்து ஒரு வருடகாலம் ஆகியுள்ளது எனவும் அறிய முடிகிறது.

## அறிவோர் ஒன்றுகூடல்–825

அறிவோர் ஒன்றுகூடல்-825, கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில், சங்கத்தின் தலைவர் கலாநிதி க.இரகுபரன் தலைமையில், புதன்கிழமை (30) மாலை 5.30 மணிமுதல் நடைபெறும்.

'குறும் திரைப்படங்கள் காட்சிப்படுத்தலும், கதையாடலும்' எனும் தொனிப்பொருளின் கீழ், தொட்டி மீன்கள், இதுவொன்றும் புதிதில்லை எனும் தலைப்புகளின் கீழ் கலைந்துரையாடப்படும்.

## காட்டு யானை மர்மமான முறையில் இறப்பு

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் குளத்தினை அண்டிய காட்டுப்பகுதியில் காட்டு யானையொன்று மர்மான முறையில் உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் மாடு மேய்க்கச் சென்றவர்களினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய இனங்கண்டுள்ளதாகவும் காட்டு யானை இறந்துள்ளமை தொடர்பாக வனஜீவராசி அலுவலகத்திற்கு அறிவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நோய் வாய்ப்பட்டு இறந்துள்ளதா அல்லது வேறு காரணங்களினால் காட்டு யானை இறந்துள்ளதா என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# ‘காணாமை சான்றிதழ்களும்’ காத்திருக்கும் உறவுகளும்

காணாமல் போனவர்களுக்கான சர்வதேச தினம் (ஒகஸ்ட் 30) இன்றாகும். இந்தத் தினத்தில், உலகளாவிய ரீதியில் பல்வேறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நமது நாட்டை பொறுத்தவரை, வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

யுத்தத்தின் போதும், அதற்கு முன்னரும் பின்னரும் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள், தங்களுடைய கைகளால் பிடித்து படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இதுவரையிலும் திரும்பி வராதவர்களுக்கு நியாயம் கேட்டு முன்னெடுக்கப்படும் போராட்டம் இன்றும் முன்னெடுக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தின் போதும் தெற்கில் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போதும் மூவினங்களைச் சேர்ந்த சாதாரண பொதுமக்களும், முப்படை மற்றும் பொலிஸார் காணாமல் போயுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களை தேடி கண்டுப்பிடிக்குமாறு கொடுக்கப்பட்ட அழுத்தங்களால், காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் திறக்கப்பட்டது. காணாமல் போனவர்களுக்காக அவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்றும், ‘காணாமை சான்றிதழ்’ அல்லது மரணச்சான்றிதழ் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை காணாமற் போனவர்களின் உறவினர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். ஐ.நாவின் மனித உரிமை பேரவை கூட்டத்தொடரின் போது, சமாளிப்புக்காக இவ்வாறான அலுவலகம் தொடர்பிலான முன்மொழிவுகள் வைக்கப்படும். அதற்பின்னர், அதுவும் காணாமல் போய்விடும். பின்னர் தூசு தட்டப்படும்.

காணாமல் போன தங்களுடைய உறவினர்களை தேடியலைந்து, அலைந்து மரணிக்கும் உறவினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. வயது மூப்பு, நோய்வாய் பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். எனினும், தங்களுடைய கைகளால் பிடித்து படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே பலரும் அழுதழுது வறண்ட கண்களுடன் இன்னும் தேடியலைந்து கொண்டிருக்கின்றனர்.

உலகெங்கும் காணாமல்போன பல்லாயிரக் கணக்கானோர் மற்றும் அவர்கள் பற்றிய தகவல்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் அவர்களது உறவினர்களின் துயரம் குறித்து கவனத்தை ஈர்க்கும் வகையிலேயே காணாமல் போனவர்களுக்கான சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முரண்பாடுகள் மற்றும் அமைதியீனத்தைக் கையாள்வதற்காக சில நாடுகளில் ஆட்களை கட்டாயமாக கடத்தி அல்லது வேறு வழியில் காணாமல் போகச் செய்யும் நடைமுறை இன்னமும் மேற்கொள்ளப்படுவதை ஐ. நா கண்டித்திருக்கிறது. எனினும், இந்த ஆட்கடத்தல்களுக்கு இன்னுமே முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என்பது மட்டும் யதார்த்தமாகும்.

தெற்கில் கிளர்ச்சிகளின் போது காணாமல் போனவர்களையும் தேடிவேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனால், காலம் நீடித்துக்கொண்டே செல்கிறது.

சர்வதேசத்தை சமாளிப்பதற்காகவும் உறவினர்களை இழந்து துடிக்கும் உறவுகளை ஏமாற்றுவதற்காகவும் பதில்களை வழங்காமால் தவிர்க்கும் நிலையில், உரிய பதிலை வழங்கவேண்டியது அரசின் கடப்பாடாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களில் தீர்வா?



எம்.எஸ்எம். ஐயூப்

அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புக்கும் இடையிலான போரின் போது, குறிப்பாக அப்போரின் இறுதிக் கட்டத்தின் போது காணாமற்போனவர்கள் விடயத்தில் அவர்களுக்கோ அல்லது அவர்களது உறவினர்களுக்கோ ஆறு மாதங்களுக்குள் நியாயம் வழங்குவதாக காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவ்வலுகலகத்தின் தலைவர் மஹேஷ் கட்டுலந்த கடந்த ஒகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் காணாமற்போனோரை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பணியின் விசாரணைகள் டிசெம்பர் மாதம் முடிவடையும என்றும் தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவினர்களின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களுக்கு காணாமற்போனோர் தொடர்பாக ‘காணாமை சான்றிதழ்கள்’ (Certificate of Absence) அல்லது மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

காணாமற்போனோரின் குடும்பங்களில் உள்ள முதியோர்கள், சிறுநீரக, இருதய சத்திரசிகிச்சைக்காக அரச மருத்துவமனைகளில் காத்திருப்போர் பட்டியல்களில் இருந்தால் அவர்களது சத்திரசிகிச்சைகளை துரிதமாக செய்வது தொடர்பாக கலந்துரையாடப்படும் என்றும் பிள்ளைகள் தொடர்ந்து கல்வி கற்கவோ அல்லது தொழில் கல்வியை தொடரவோ விரும்புவதாயின் அதற்காக அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார்.

வடக்கு கிழக்கு போரின் போதும் தெற்கில் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போதும் சாதாரண தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் காணாமற்போயுள்ளனர். அவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர். பிரதானமாக அரச படைகளும் புலிகள் அமைப்பினர் உள்ளிட்ட தமிழ் அமைப்புக்களும் மக்கள் விடுதலை முன்னணியினருமே கடந்த நான்கு தசாப்தங்களில் இவ்வாறு ஆட்கள் காணாமல் போனமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

30 ஆண்டு கால போரின் போது பெரும்பாலும் தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட போதிலும் அதனை விட பன்மடங்கு அதிகமான சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் 1988 மற்றும் 89 ஆகிய ஆண்டுகளில் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அக்காலத்தில் தெற்கில் 64,000க்கு மேற்பட்டவர்கள் காணாமற்போயுள்ளதாக கூறப்படுகிறது.

தெற்குக் கிளர்ச்சிகளின் போது காணாமலாக்கப்பட்டவர்களுக்காக 1980களில் தாய்மார்களின் முன்னணி போன்ற அமைபபுக்கள் போராடின. அப்போராட்டங்கள் 1990 களின் நடுப்பகுதியில் இருந்து காண்பதற்கு இல்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நியாயம் வழங்கப்படவும் இல்லை. வடக்கு கிழக்கிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேற்பட்ட காலத்தில் நியாயம் கேட்டு போராடி வருகின்றனர்.

இப்போராட்டங்களின் பயனாகவே ஐ.நா மனித உரிமை பேரவையின் நெருக்குதலில் அரசாங்கம் 2016 ஆம் ஆண்டு காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை விசேட சட்டமொன்றின் கீழ் ஆரம்பித்தது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காணாமை சான்றிதழ்களை அல்லது மரணச் சான்றிதழ்களை வழங்கவே அவ்வலுவலகம் முனைந்துள்ளது.

இச்சான்றிதழ்களை வழங்குவது நீண்ட காலமாகவே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது. ஆயினும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதனை தொடர்ந்து மறுத்து வருகின்றன. அவர்கள் காணாமற்போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் அவர்கள் உயிருடன் இருப்பதாயின் எங்கே இருக்கிறார்கள் என்பதையும் வெளியிடுமாறே அரசாங்கத்தை வற்புறுத்துகின்றனர்.

இக்கோரிக்கைகள் நியாயமற்றவை என்று எந்தவோர் அரசாங்கமும் இது வரை கூறவில்லை. ஆயினும் எந்தவோர் அரசாங்கமும் அக்கோரிக்கையை நிறைவேற்றவில்லை. அதனை நிறைவேற்றுவதற்காகவென ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் எந்தவொரு பயனும் கிட்டவில்லை. காணாமற்போனோரின் அலுவலகம் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுமா என்பதும் சந்தேகமே.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் கலந்து கொண்ட ஊடகவியலாளர் மாநாட்டை அடுத்து எழும் முக்கிய கேள்வி என்னவெனில் திடீரென அவரோ அரசாங்கமோ இந்த ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்ய காரணம் என்ன என்பதேயாகும். ஆறு மாதங்களில் 20,000க்கு மேற்பட்டதாக அனுமானிக்கப்படும் வடக்கு, கிழக்கு காணாமற்போனோரை கண்டு பிடிக்கவோ அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டுபிடிக்கவோ தமது அலுவலகத்தால் முடியும் என்ற நம்பிக்கையிலோ அல்லது மேற்படி சான்றிதழ்களை ஏற்க பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இணங்குவர் என்ற நம்பிக்கையிலோ இந்த ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்பட்டது என்றால் அதனை விளங்கிக் கொள்ளலாம்.

அதேவேளை, காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவரின் தேவைக்காக அவர் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டார் என்று கூற முடியாது. அரசாங்கத்தின் தேவைக்காகவே அவர் இந்த அறிவித்தலை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிட்டு இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கமாக இரண்டு விடயங்களை அனுமானிக்கலாம். விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முயலும் நிலையில் அதற்கு முன்னர் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது ஒரு நோக்கமாக இருக்கலாம். ஏனெனில் காணாமற்போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய அக்குடும்பத்தவர்கள் விரும்பினாலும் இப்பிரச்சினை நீடிப்பதால் அவர்கள் மேலும் பல பிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள். சொத்துப் பாகப்பிரிவினை மற்றும் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளல் போன்றவை அவற்றில் சிலவாகும். பாதிக்கப்பட்ட சில குடும்பங்களில் உள்ளவர்கள் எவ்வகையிலேனும் தற்போதைய நிலையற்றத்தன்மை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று நினைக்கலாம்.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 13 திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னர் நல்லதொரு செய்தியை ஜெனிவாவுக்கு அனுப்புவது சிலவேளை இந்த ஊடகவியலாளர் மாநாட்டின் மற்றொரு நோக்கமாக இருக்கலாம். அரசாங்கம் மனித உரிமை பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தொடருக்கு முன்னரும் இது போன்ற ஏதாவது செய்வது வழக்கமாகும்.

மனித உரிமை விடயத்தில் அரசாங்கங்கள் இது வரை நியமித்த ஆணைக்குழுக்கள் அனைத்தினதும் அறிக்கைகளை பரிசீலித்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்க மற்றொரு புதிய ஆணைக்குழுவை நியமிப்பதாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாத கூட்டத்தொடரின் போது அப்போதைய வெளிநாட்மைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பின்னர் 2021 ஆம் ஆண்டு மார்ச் கூட்டத்தொடர் வரை காத்திருந்து அரசாங்கம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே அந்த புதிய ஆணைக்குழுவை நியமித்தது. அக்குழு தமது இரண்டாவது இடைக்கால அறிக்கையை 2022 ஆம் ஆண்டு மார்ச் கூட்டத்தொடருக்கு முன்னர் அதாவது பெப்ரவரி மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்ததாக ஜனாதிபதி அலுவலகம் அறிவித்தது. 2023 ஆண்டு பெப்ரவரி மாதம் அக்குழு தமது இறுதி அறிக்கையின் பரிந்துரைகளின் சாராம்சமொன்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்ததாக ஜனாதிபதி அலுவலகம் அறிவித்தது.

1980 ஆம் ஆண்டுகளில் இருந்தே மாறி மாறி பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் காணாமற்போனோர் பற்றிய விடயத்தை பொதுப் பணத்தை பாவித்தே மிக சாதுர்யமாக இழுத்தடித்து வருகின்றன. தமக்கு எதிராக மிகப்பெரும் மனித உரிமை மீநல் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1992 ஆம் ஆண்டு முதலாவதாக காணாமற்போனோர் தொடர்பாக ஆணைக்குழவொன்றை நியமித்தார். அடுத்த வருடமே அது காணாமற்போய்விட்டது.

அதே காணாமற்போனோரைப் பற்றி விசாரிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதலில் தேசிய ரீதியில் ஒரு ஆணைக்குழுவை நியமித்து பின்னர் மூன்று பிராந்திய ஆணைக்குழுக்களை நியமித்தார். அவற்றுக்கும் அதே கதி நேர்ந்தது.

அதனை அடுத்து காணாமற்போனோர் உள்ளிட்ட ஏனைய மனித உரிமை மீறல்களை ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதலில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லியக்க ஆணைக்குழுவையும் பின்னர் காணாமற்போனோர் பற்றிய பரணகம ஆணைக்குழுவையும் நியமித்தார். அத்தனையும் காணாமற்போனதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தை நியமித்துள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, மன உறுதியுடன் அழியாமல் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி, உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில் நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிழர்மறைக் கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள். கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை பிறர் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கெயானது.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மக்களே அவதானம்

திருக்கோவில் பிரதேசத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட பாரிய கடலரிப்பை கட்டுப்படுத்துமுகமாக பாரிய கருங்கற்கள் போடப்பட்டுள்ளன.

குறிப்பாக திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் முன்புறம் உள்ள கடற்கரைப் பகுதியில் இக் கருங்கற்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் போடப்பட்டுள்ளன.

இதேவேளை ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஒகஸ்ட் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது.

திருவிழாவிற்கு செல்வோர் குழந்தைகளை கடற்கரை பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டாமென ஆலய நிர்வாகமும் பொலிஸாரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக தீர்த்தம் ஆடும் வேளையில் மிகவும் அவதானமாக கவனத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். மீறினால் ஆபத்தை சந்திக்க வேண்டி நேரிடும் என்று எச்சரிக்கை இடப்பட்டுள்ளது.

வி.ரி.சகாதேவராஜா



# சர்வதேச காணாமல் போனோர் தினம்



கண்டுமணி லவகுசராசா
tsanjeevan@yahoo.com








ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் 30ம் திகதி சர்வதேச காணாமல் போனோருக்கான தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு காரணங்களுக்காக இராணுவத்தினராலோ அல்லது பாதுகாப்பு படையினராலோ கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவும், இரகசிய கைதுகளை தடுக்கவும் அது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவுமே இதற்கான நாள் ஒன்று உருவாக்கப்பட்டது.

இதன் உருவாக்கத்தின் பின்னணியில் இலத்தீன் அமெரிக்க நாடான கொஸ்டாரிக்கா உள்ளது. இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் வலிந்து காணாமலாக்கப்படுதலை (forced disappearance) ஒரு அரசியல் அடக்கு முறையாக பாவித்த நாடுகளில் முதலிடத்தை இலத்தீன் அமெரிக்க நாடுகள் பெறுகின்றன.

இரண்டாம் உலக யுத்த காலகட்டத்தில் இரகசிய கைதுகள், முகாம்களில் அடைத்து வைத்தல், சித்திரவதைகள் போன்றவற்றிற்கு காரணமாக ஜேர்மனியின் நாசி படைகள் இருந்ததை உலகம் அறியும். அதே போன்று இலத்தீன் அமெரிக்க நாடுகளான கொஸ்டரிக்கா, வெனிசுவேலா, பெரு, ஆர்ஜன்டீனா, உருகுவே, சிலி, பிரேஸில் ஆகிய நாடுகளில் 1980 களில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்தன.

இதை தடுப்பதற்கு கொஸ்டரிக்காவில் இயங்கி வந்த FEDEFAM என்ற அரச சார்பற்ற அமைப்பு முதன் முதலாக குரல் கொடுத்திருந்தது. பின்னர் இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு, சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியன தமது கவனத்தை திருப்பியிருந்தன. எனினும் இன்று உலக நாடுகள் பலவற்றில் பல்வேறு காரணங்களுக்காக காணாமல் போனோரின் தொகை அதிகரித்து வருகிறது.

உலகில் இடம்பெற்ற சில மோசமான காணாமல் போக செய்த சம்பவங்களாக,

1. ஆர்ஜெண்டீனா : 1976 - 1983 காலப்பகுதியில், 30,000 பேர் கடத்தப்பட்டார்கள். அகதிகளுக்கான முகாம்களில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். போதை மருந்துக்கு ஊக்கப்படுத்தப்பட்டார்கள். சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு விமானங்களிலிருந்து ரியோ டெல பிளட்டா நதிக்குள் வீசப்பட்டார்கள். 1983ம் ஆண்டு 'NEVER AGAIN' எனும் கமிஷன் ஆரம்பிக்கப்பட்டபோது, ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்கள் அன்றைய ஜுந்தா இராணுவ ஆட்சியாளர்களின் மீது சுமத்தப்பட்டன. 20 வருடங்களுக்கு பிறகே இதற்குரிய தண்டனை இராணுவ அதிகாரிகள் சிலருக்கு கிடைக்கப்பெற்றது.

2. போஸ்னியா : 1991 - 1995 காலப்பகுதியில், 10,000 ற்கு மேற்பட்ட போஸ்னியர்கள் காணாமல் போனார்கள். போஸ்னிய - சேர்பிய - யூகோஸ்லாவிய யுத்தத்தில் இப்பேரவலம் நடந்தது.

3. கம்போடியா : 1975 - 1979 காலப்பகுதியில், கிமெர் ரூஜ் ஆட்சிக்காலத்தில், 1.7 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போனார்கள். அண்மையில் கிமெர் ரூஜ் தலைவர்கள் மூவருக்கு இதற்குரிய தண்டனை வழங்கப்பட்டது.

4. ஈராக் : அமெரிக்கா 2003ம் ஆண்டு படையெடுப்பை தொடக்கி கடந்த வருடம் முடிவடையும் வரை நடத்தி முடித்த யுத்தத்தில் ஈராக்கில் 15,000 பேர் காணாமல் போயுள்ளனர்.

5. கொரியா : 1950 - 1953 காலப்பகுதியில் நடைபெற்ற கொரிய யுத்தத்தில், 86,000 தென்கொரியர்கள் வடகொரியாவால் கடத்தப்பட்டனர்.

6. இலங்கை : இலங்கையில் கடந்த 2009ம் ஆண்டு முடிவுற்ற சிவில் யுத்தத்தின் பின்னரும், அதற்கு முன்னரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

இவற்றை விட ஆர்மெனியா, பாகிஸ்தான், துருக்கி, பிரேசில், சிலி, சஹாரா, உகண்டா, கொசோவா, ரஷ்யா, செனகல் என மேலும் பல நாடுகளில் காணாமல் போதல் சம்பவங்களில் கணிசமாக நடந்துள்ளன.

இதன் பின்னணியில் கூடுதலாக அரசியல் காரணங்களே விளங்குகின்றன. எனினும் எந்த அரசாங்கமும் அதை ஏற்றுக்கொள்வதில்லை என்பதோடு காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களை அவர்களின் உறவினர்களுக்கு தெரியபடுத்துவதிலும் அக்கறை காட்டுவதில் பின்னிற்கின்றன அல்லது அது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதில் இழுத்தடிப்பகளை செய்து வருகின்றன.

இதில் இலங்கையும் விதிவிலக்கல்ல. மூன்று தசாப்த கால யுத்த காலத்தில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கூடுதலாக இறுதி யுத்த காலகட்டத்தில் இத்தொகை அதிகம். காணாமல் போனோரின் உறவினர்களின் தொடர் போராட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்கள் காரணமாகவே அரசாங்கம் காணாமல் போனோருக்கான அலுவலம் ஒன்றை ஸ்தாபித்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளவும் விசாரணைகளை மேற்கொள்ளவும் ஆணைக்குழுவொன்றையும் நியமித்தது.

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள காணாமல் போனோருக்கான அலுவலகமானது வடக்கு கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமானது. ஆகவே அனைவரும் இதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என இதன் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தமை முக்கியமானது.

அதாவது யுத்தகாலத்தில் இருதரப்பிலும் காணாமல் போயிருந்தனர் என்ற விடயம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. எனினும் யுத்த காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளில் காணாமல் போன மக்கள் தொகையே அதிகமாக பதிவாகியுள்ளது. அலுவலகத்தில் முறைப்பாடு செய்ய வருவோர் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவே அதிக அக்கறை காட்டுகின்றனர். இதன் காரணமாகவே பலர் இறப்புச் சான்றிதழைப் பெறுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மட்டுமன்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த ஒரு சிலரின் தகவல்கள் இதுவரை தெரியாதிருப்பதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சொத்து விவகாரம் மற்றும் பிள்ளைகளின் எதிர்கால நடவடிக்கைகளுக்கான சட்ட ரீதியான நகர்வுகளுக்காக ஒரு நிர்பந்தத்தின் அடிப்படையிலேயே பல உறவினர்கள் இறப்பு சான்றிதழை பெற்றிருக்கின்றனர் என்பது வேதனையான விடயம். குறிப்பாக கணவனை இழந்த மனைவிமார், பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் தாய்மார்கள், சகோதரர்கள் இவ்வாறு இறப்பு சான்றிதழைப் பெற்றிருக்கின்றனர். முறைப்பாடு செய்து சுமார் 15 வருடங்கள் கழிந்த நிலையில் பலர் இந்த சான்றிதழைப் பெற்றுள்ளனர் என்பது முக்கிய விடயம். 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக 6025 முறைப்பாடுகள் உட்பட 2023 மே மாதம் வரையில் மொத்தமாக 21374 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 6386 முறைப்பாடுகள் படையினர் தொடர்பானதாக இருப்பதாகவும் 14988 ஏனையோருடையது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இதுவரைக்கும் 3819 பேருடைய முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் 1283 பேருக்கான சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக காணாமல் போனோருக்கான அலுவலகம் கூறுகிறது. அச்சமூட்டும் மனித எச்சங்கள் யுத்த காலப்பகுதியில் சந்தேகத்தின் பேரிலேயோ அல்லது விடுதலை புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பலரின் தகவல்கள் இன்னும் வெளிவராமலிருக்கும் நிலையில் இவர்கள் வெவ்வெறு இடங்களுக்கு கொண்டு சென்று கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் இன்னும் அவர்களின் உறவினர்களுக்கு உள்ளது.

இந்நிலையில் 2014ம் ஆண்டு மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பாரிய மனிதப்புதைகுழி மற்றும் 2023ம் ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழி ஆகியன காணாமல் போனோரின் உறவினர்களிடயே பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளமை என்னவோ உண்மை.

இதுவரை கிடைத்துள்ள எண்ணிக்கைளின் அடிப்படையில் பார்க்கும் போது உலகில் அதிகம் காணாமல் போனோர் பதிவான நாடாக இலங்கை உள்ளதை கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனெனில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 12 இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் காணாமல் போனோர் தொகை குறிப்பிட்ட காலப்பகுதியில் 90 ஆயிரமாக இருக்கையில் இலங்கை போன்ற சிறிய தீவில் காணாமல் போனோரின் எண்ணிக்கை அதிகமாகும். யுத்த காலத்து மக்கள் குடித்தொகை கணக்கெடுப்பின் படி சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வரையானோர் காணாமல் போயிருப்பதாக ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதை பற்றி ஆராய்தல் அவசியம்.

மேலும் முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய், மன்னார் மனித புதைக்குழி போன்று இன்னும் எத்தனையோ வெளிப்படாமலிருக்கும் இடங்கள் வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருக்கலாம். அவற்றை எவ்வாறு இனங்காண்பது மேலும் இதுவரை கிடைத்திருக்கும் முறைப்பாடுகளுக்கு அமைய அடுத்தகட்ட விசாரணைகள்எவ்வாறு முன்னெடுப்பது என்பதிலேயே காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் வெற்றி தங்கியுள்ளது.



# தடைகளை உடை



மகேந்திரன் மதுஷியா
ஊடகக்கற்கைகள்
யாழ்.பல்கலைக்கழகம்

பிறரால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிட்ட குழுவினரை பற்றிய மிகைப்படுத்தப்பட்ட யோசனை அல்லது பாடம் மீள்வருவார்ப்பு எனப்படும் .மீள்வருவார்ப்பு என்பது ஒரு குழுவை பற்றிய பொதுமைப்படுத்தல்கள் ஆகும். இதன் மூலம் இந்த குழுவிற்கு வரையறுக்கப்பட்ட குணாதிசயங்களின் தொகுப்பை கூறுகிறோம். இது குறிப்பிட்ட நபர்களை பற்றிய பிரபலமான நம்பிக்கையாகும். பாலினம், இனம் ,தேசிய தோற்றம் மற்றும் பிற காரணிகளை உள்ளடக்கிய நபர்களின் குழுக்களுக்கு கூறப்படும் பண்புகளாகும்.

மீள்வருவார்ப்புகள் ஏன் உருவாகின்றன? உண்மையில் மற்றவர்களை அறியாததால் மீள்வருவார்ப்புகள் உருவாகின்றன.. பொதுவாக அவை தவறான தகவல்கள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் உருவாகின்றன. அதனால் தான் பன்முகத்தன்மை பயிற்சி முக்கியமானது. ஆண்களின் ஒரே மாதிரியான பண்பாடு நமது சமூக உலகத்தை எளிமையாக்கும் ஒரு முக்கிய வழியாகும்...

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கதாபாத்திரங்களை முன்னிறுத்துவதற்கு இவை பயன்படுத்தப்படுவதோடு பெரும்பாலும் புத்தகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. பொருட்களை விற்பதற்காக விளம்பரங்களிலும் கூறப்படுகின்றன .மனிதர்கள் மற்றும் இடங்களை பற்றிய கருத்துக்கள் மூலம் பெரியவர்களிடமிருந்து அவர்கள் குழந்தைகளுக்கு ஒரே மாதிரியான கருத்துக்கள் அனுப்பப்படுகின்றன .90% வீதம் படைப்புகள் பெரும்பாலும் உண்மைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இவை குழந்தைகள் பிறந்து ஆரம்பத்தில் இருந்தே அவர்கள் மனதில் விதைக்கப்படுகின்றன. அவர்கள் பெரியவர்களாக வளரும் அந்த வளர்ச்சியுடன் சமூகத்தில் பின்பற்றப்படும் கட்டமைக்கப்பட்ட பல பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன.

பெண் குழந்தை பாபிடோல் உடனும் ஆண் குழந்தை லாரி, காருடன் விளையாட வேண்டும் என்பதில் ஆரம்பித்து, பின்பு பெண்கள் என்றால் சமைப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்குமென, ஆண்கள் அதிகாரம் உடையவர்கள் அவனின் வார்த்தைக்கு பெண்கள் எதிர் பேச்சு பேசக்கூடாது என வளர்ந்து இப்போது பெருவிருச்சமாக வளர்ந்து நிற்கின்றது .பெண்கள் என்றால் பொட்டு வைக்க வேண்டும், பூ வைக்க வேண்டும், புடவை அணிய வேண்டும், ஆண்கள் என்றால் சேட் பேன்ட் அணிய வேண்டும், தலைமுடி வளர்க்கக்கூடாது, இவையெல்லாம் யார் வகுத்தது? யார் பிரித்து வடிவமைத்தது? என்றாவது ஒருநாள் நமக்குள்ளே சிந்தித்து இருப்போமா ?

ஆண்கள் என்றால் படகோட்டி, இன்ஜினியர், பைலட் என்றும் பெண்கள் என்றால் நர்ஸ்,டீச்சர், பியூட்டிஷியன்,பேஷன் டிசைனர் என்றும் தொழில்களில் கூட அவர்களுக்கென வேறாக்க பட்டுள்ளதை நாம் அறிந்தும் எதுவும் பேசாமல் ஏற்றுக்கொண்ட காலம் போய் அவைகளை தகர்த்தெறிந்து ஆண்கள் இடத்தில் பெண்களும் பெண்களிடத்தில் ஆண்களும் பதவி வகித்து சரித்திரம் படைத்து வரும் காலம் இது. இருந்தாலும் கூட முற்றாக இந்த மீள்வருவார்ப்புகள் இன்னும் அழிந்துவிடவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

இவை மட்டுமல்லாது எமது சமூகத்தில் எத்தனை எத்தனையோ அர்த்தமற்ற பேச்சுகளும் ஆதாரமற்ற விவாதங்களும் இடம்பெற்ற வண்ணம் தான் இருக்கின்றன. அவற்றை நாம் பட்டியலிடுவது என்றால் வானம் தான் சரியாக இருக்கும். இருந்தாலும் சிலவற்றை நான் ஞாபகமூட்டுவதில் தவறில்லை.

பிராமணர்கள் என்றால் ஒழுக்கமானவர்கள் மற்றும் திறமையானவர்கள்

திருமணம் ஆனவுடன் குழந்தை பிறந்து விட வேண்டும். இல்லை யெனில் அவர்களை கேவலமாக பேசுவது.

படித்து பதவியில் இருப்பவர்களது பிள்ளைகள் அவர்களை போல் ஒரு பதவியில் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தல். ஆனால் ஒரு விவசாயி அல்லது வேறு தொழிலாளியின் பிள்ளைகள் தொழிலாளியாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பர்.. மாறாக இந்த கட்மைப்பு உடைக்கப்பட்டு விவசாயின் மகன் டாக்டராக வந்து விட்டால் அது சாதனையாக கொண்டாடப்படுகிறது..

இலங்கை நாட்டின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுபவர் கட்டாயம் ஒரு சிங்களவராகவே இருக்க வேண்டும் என்ற விதி.

படித்து பட்டம் பெற்ற பெண்ணுக்கு பட்டம் பெற்ற ஆணை தான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற பெற்றோரின் கனவு .

பணம் படைத்தவர் எந்தளவு கெட்டவராக இருந்தாலும் அவர் கூறும் கருத்துக்களை ஆமோதித்தல் .ஏழையுடைய வார்த்தையில் உண்மையும் நேர்மையையும் இருந்தாலும் கூட யாரும் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாமை.

திருமணத்தின்போது ஆண்களுக்கு பெண்கள் சீதனம் கொடுத்தல்.

விதவை பெண்ணொருத்தியை எந்தவித நல்ல காரியத்திற்கும் முன் நிற்க இடமளிக்காமை.

கிராமத்தவர்கள் என்றால் இப்படித்தான், நகரத்தவர்கள் என்றால் இப்படித்தான் என ஒரு வேறுபாட்டை உருவாக்கி வைத்தல் .

பெண் குழந்தை பிறந்தால் செலவு அதிகம் வளர்ப்பது கடினம் எனவும் ஆண் குழந்தை பிறந்தால் அதனை அதிர்ஷ்டமாகவும் கடைசி காலத்தில் பெண் திருமணமாகி கணவனுடன் சென்ற பிறகு ஆண்தான் பெற்றோரை பார்ப்பான் என்ற நம்பிக்கை.

ஏன் பெண் குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்துக் கொன்ற சமூகத்தை கடந்து தான் இன்று நாம் வாழ்கின்றோம். மனித வர்க்கமானது இவ்வாறு பல பிரிவினைகளையும் வேற்றுமைகளையும் வக்ரங்களையும் தன் வாழ்வில் இறுதி வரை பின்பற்றுகிறது.

மொழி ரீதியாக மனிதனை பிரித்துப் பார்க்கின்றான். இனம்,மதம், சாதி, அன்பு,உறவானவன் ,உற்றவன்,பணக்காரன் ,ஏழை ,படித்தவன்,பாமரன், ரத்த பந்தம், அன்னியன் அதிலும் மூத்தவன், இளையவன் இவ்வாறு இரண்டு கண்கள் இரண்டு காது அனைத்து மனிதருக்கும் ஒன்றான உடலுடன் அனைவருக்கும் உடம்பிலோடும் ஒரே நிறமான குருதியைக் கொண்ட மனிதர்களுக்கு எத்தனை பிளவுகள்,பிரிவினை, ஏற்ற தாழ்வுகள் ..

அனைத்தும் மனிதன் தோன்றி சில நாட்களில் பின்பற்றி வரும் மீள்வருவார்ப்புகளாக என்றும் காணப்படுகின்றன.. இவ்வாறு பல சீரியப்புகளில் 60% வீதமானவை விளம்பரங்களாலும் திரைப்படங்கள் மூலமும் சமூகத்தில் விதைக்கப்பட்டவை இன்றும் நிலைக்கிறது. என்பதில் மாற்றுக் கருத்துக்கள் என்னுள் இல்லை.

நாம் வாழும் சமூகத்தில் இடம்பெறும் பல அர்த்தமற்ற கதைகளுக்கும் போக்குகளுக்கும் எதுவும் எதிர்த்து கூறமுடியாதவர்களாக உள்ளோம். ஏனெனில் தவறான பிழையான தீர்மானங்களை காலம் காலமாக பின்பற்றி வருவதனால் அதனை தவறு என உள் மனம் கூறினாலும் கூட எதிர்க்கமுடியாத நிலையில் உள்ளோம்.காரணம் நமது பெற்றோர்களாக இருக்கட்டும் நமது பரம்பரையாக இருக்கட்டும் முன்னோர்கள் வகுத்து வைத்த 'மீள்வரு வார்ப்புகள்' என்று கூறுவதை விட கட்டுக்கதைகள் எனவும் மூடநம்பிக்கைகள் எனவும் கூறலாம். இவ்வாறான மீள்வருவார்ப்புகளால் சமூகத்தில் நன்மைகள் விளையும் அதேவேளை தீமைகள் பலவும் விளைகின்றன ..

அந்த வகையில் இவற்றால் விளையும் நேர்மறையான அம்சங்கள் எனும்போது,இவை தகவல் செயலாக்கத்தின் சுமையை எளிதாக்குகின்றன. இது சமூக விடாமுயற்சியாளர்களுக்கு ஒரு செயல்பாட்டு அம்சத்தையும் வழங்குகின்றது.

ஒரே மாதிரியான இலக்கில் கிடைக்கும் தகவலை வளப்படுத்துவதன் மூலம் அவை செயல்படுகின்றன.

கடைசியாக அவை சமூக சந்திப்புகளில் கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு அப்பால் சென்று நமது தற்போதைய அறிவுத்தளத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்ப உதவுகின்றன. இவ்வாறான சில மீள்வருவார்ப்புகள் காரணமாக சில மக்கள் குழுவையும் அல்லது சில குறிப்பிட்ட மனிதரையோ நற்பண்புள்ளவர்களை குறைத்து மதிப்பிடுவதுடன் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கி நடப்பதும் அவர்களை உளவியல் ரீதியாக பாதிப்படையை செய்கிறது. அதுமட்டுமன்றி அவர்களின் பிள்ளைகள் ,பிள்ளைகளின் பிள்ளைகள் என முழுப் பரம்பரைக்கும் அவ்வேற்றுமை விதைக்கப்பட்டு ' ஆம் நாங்கள் குறைந்த சாதி எங்களை யாரும் தீண்ட கூடாது' என அவர்களே ஒத்துக்கொள்ள வைக்கும் அளவுக்கு இக்கட்டமைப்புகள் தாக்கம் செலுத்துகின்றன.

ஒருவர் எவ்வாறான குணம் படைத்தவர் நல்லவரா? கெட்டவரா? என ஒருவர் பற்றி அறியாமல் காலம் காலமாக யாரோ கூறிய அர்த்தமற்ற கருத்துக்களுக்கு இன்று முக்கியத்துவம் கொடுத்து நல்ல மனிதர்களை நட்புக் கொண்ட நண்பர்களை இழந்து கொண்டு வருகின்றனர் மனிதர்கள்.

நாங்கள் யோசிக்காமல் அந்த தவறை நாங்களே உணராமல் அது எப்பொழுதும் திருத்தப்பட போவதில்லை. இவ்வாறான அர்த்தமற்ற கருத்துக்களை எதிர்த்து மீள்வருவார்ப்புகள் அதனை உடைத்து முன்னோக்கி நாம் செல்லும்போதே இவ்வாறான சமூகத்தில் வேரூன்றி இருக்கும் மீள்வருவார்ப்பு எனும் களைகளை நாம் அகற்ற முடியும்.


சமூகத்தில் உள்ள மக்களிடையே உள்ள தவறான எண்ணங்களை நீக்கி கருத்து பரிமாற்றத்தில் கவனம் செலுத்துவதன் மூலமும் வேறுபாடுகளை புரிந்து கொள்வதற்கான சகிப்புத்தன்மையை உணர்த்துவதன் மூலம் மற்றும் ஒரே மாதிரியான தீர்வுகளையும் சிறுபான்மை குழுக்களை மக்கள் சந்திக்கும் சமூக ஒருங்கிணைப்பு மூலமாகவும் இது தீர்க்கப்படும்.

மும்பை

# ஜியோ 5ஜி சேவையை விரிவுபடுத்தப்படும்

## முகேஷ் அம்பானி

நாடு முழுவதும் வரும் டிசெம்பருக்குள் ஜியோ 5ஜி சேவை விரிவுபடுத்தப்படும் என முகேஷ் அம்பானி தெரிவித்துள்ளார். இந்தியாவை ஒரு முன்னணி டிஜிட்டல் சமூகமாக வடிவமைக்கும் நோக்கத்தில், கடந்த 7 ஆண்டுகளாக ரிலையன்ஸ் ஜியோவின் மாற்றும் பயணத்தை பெருமையுடன் வெளிப்படுத்தியுள்ளது. நாட்டின் டிஜிட்டல் பரிணாம வளர்ச்சிக்கு செயல்படும் ஜியோவின் தாக்கம் இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பால் விரிவடைந்துள்ளது.



ரிலையன்ஸ் நிறுவன 46ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் உரையாற்றிய முகேஷ் அம்பானி, சந்திரயான்-3 வெற்றிக்கு காரணமான இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார். பின்னர் “2047ம் ஆண்டில் தன்னம்பிக்கை நிறைந்த புதிய இந்தியா முழு வளர்ச்சியை எட்டும்”. செப்டம்பர். 19 விநாயகர் சதுர்த்தி முதல் வயர் இணைப்பு இன்றி அதிவேக இணைய வசதி கொண்ட ஜியோ ஏர் பைபர் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

மயிலாடுதுறை

# மயிலாடுதுறை மயில் இறந்தது

மயிலாடுதுறை காவிரி வடகரையில் வதான்யேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. புகழ் பெற்ற குரு பரிகாரம் கோவிலில் தினம் தோறும் அப்பகுதியில் வசிக்கும் மயில் ஒன்று வந்து உலாவி விட்டு செல்வது வழக்கம்.

சம்பவதன்று கோயிலுக்கு வந்துவிட்டு மீண்டும் பறந்து சென்ற பொழுது கோயில் ஆர்ச் அருகே இருந்த மின் கம்பியில் பட்டு உயிருக்கு போராடியது. இதை பார்த்த பக்தர்கள் மயிலுக்கு முதல் உதவி சிகிச்சை அளித்தனர். ஆனால், சிகிச்சை பலனின்றி மயில் பரிதாபமாக உயிரிழந்தது. மயிலின் உடலை சீர்காழி வனத்துறையினர் கைப்பற்றி கொண்டு சென்றுள்ளனர்.



பஞ்சாப்

# புஷ்-அப்பில் கின்னஸ் சாதனை

சமீப காலமாக சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள், பெண்கள் என பலரும் பல்வேறு வகைகளில் தங்களது திறமைகளை நிரூபித்து கின்னஸ் சாதனை படைத்து வருகின்றனர்.

அந்த வகையில் பஞ்சாப்பை சேர்ந்த குவார் அம்ரித்பீர்சிங் என்ற வாலிபர் புஷ்-அப் செய்வதில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

குர்தாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள உமர்வாலா என்ற கிராமத்தை சேர்ந்த 21 வயதான குவார் அம்ரித்பீர்சிங் தனது முதுகில் 20 பவுண்ட் எடை கொண்ட பேக்கை சுமந்து கொண்டு ஒரு நிமிடத்தில் விரல்களின் நுனியில் 86 புஷ்-அப்களை செய்து இந்த சாதனையை படைத்துள்ளார்.






ஸ்கொட்லாந்து

# இராணுவ மேஜராக பென்குயின் நியமனம்

ஸ்கொட்லாந்து நாட்டின் எடின்பர்க் விலங்கியல் பூங்காவில் வசித்து வந்த சார் நில்ஸ் ஒலவ் 3 என்ற ராஜா வகை பென்குயின், தற்போது அந்நாட்டின் இராணுவ மேஜர் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. நோர்வேஜியன் அரச பிரிவு படைக்கு தளபதியாக இந்த பென்குயின் செயல்பட உள்ளது.

எடின்பர்க் விலங்கியல் பூங்காவில் பென்குயின் தளபதியாக பொறுப்பேற்கும் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் அந்தப் படைப் பிரிவை சேர்ந்த 150 வீரர்கள் கலந்து கொண்டனர். வனவாழ்வு பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்ட பிரத்தியேகமிக்க விழாவில் இந்த பென்குயினுக்கு மிக உயரிய கௌரவம்



அளிக்கப்பட்டது.

ரீகல் பிளாக் (கருப்பு) நிறம் அதிகமாகவும், வெள்ளை மற்றும் மஞ்சள் நிறம் ஆங்காங்கே இடம்பெற்ற வகையிலும் பென்குயின் உள்ளது. நார்வேஜியன் அரச பிரிவு படைக்கு இதே நிறத்தில் தான் கடந்த 1972 ஆம் ஆண்டு முதல் சீருடை வழங்கப்பட்டு வருகிறது. நில்ஸ் ஒலவ் என்ற பட்டம் இதற்கு முன்பு இரண்டு பென்குயின் பறவைகளுக்கு அடுத்தடுத்து வழங்கப்பட்டிருந்தது.

வடகொரிய

# கிம் ஜோங் உன்னை கொலை செய்ய முயற்சி

வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன்னை கொலை செய்ய அந்நாட்டின் தலைநகரில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து கிம் ஜோங் உன்க்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சம்பவத்திற்கு யார் காரணம் என்பதை கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்குமாறு கிம் ஜோங் உன் உத்தரவிட்டுள்ளார். இதற்கிடையே கிம் ஜோங் உன் படுகொலை செய்ய முயன்றவர்கள் யார் என்பது குறித்து அந்நாட்டு உயர் அதிகாரிகள் சந்தேகம் கிளப்பியுள்ளனர்.



அணு ஆயுதத்திற்கு பெயர் போன வடகொரியாவில் அந்நாட்டு தலைவர் கிம் ஜோங் உன்னை எதிரிகள் நெருங்காதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்நிலையில் சமீபத்தில்

அங்கு தலைநகர் பியோங்யாங்கில் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. கிம் ஜோங் உன்னை குறி வைத்து இந்த அசம்பாவிதம் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ds by

வடகொரியாவில் நடந்த கொலை முயற்சி 8 வாரத்திற்கு முன்பு நடந்ததாக தகவல் ஒன்று கூறுகிறது. இருப்பினும் பல்வேறு கட்டுப்பாடுகளை மீறி தற்போதுதான் இந்த தகவல் கசிந்திருக்கிறது. இதனை வடகொரிய அதிகாரிகள் மிகவும் ரகசியமாக வைத்திருந்தனர்.

ஆப்கானிஸ்தான்

# தேசிய பூங்காவுக்கு பெண்கள் செல்ல தடை

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிய தலிபான்கள், பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறார்கள். உயர்நிலை கல்வி பயில பெண்களுக்கு தடை விதித்தனர். பல்கலைக்கழகங்கள், அரசு சாரா நிறுவனங்கள் போன்றவற்றில் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந் நிலையில் தேசிய பூங்காக்களுக்கு பெண்கள் செல்லக்கூடாது என்று தலிபான்கள் மேலும் ஒரு தடை விதித்துள்ளனர். இதுகுறித்து தலிபான் அரசின் நல்லொழுக்கம் துறை துணை மந்திரி காலித் ஹனாபி கூறும்போது, ‘பூங்காவுக்கு செல்லும்போது பெண்கள் ஹிஜாப் அணிவதில் சரியான முறையை கடைபிடிப்பதில்லை. பெண்கள் பூங்காவுக்கு செல்வதற்கான விதிமுறைகள் தயாராகி வருகின்றன. அதுவரை பெண்கள் பூங்காவுக்கு செல்ல தடை விதிக்கப்படுகிறது என்றார்.

# இன்று ஆரம்பிக்கிறது ஆசியக் கிண்ணம்

ஆசியக் கிண்ணத் தொடரானது பாகிஸ்தானின் முல்தானில் அவ்வணிக்கும், நேபாளத்துக்கும் இடையே இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

ஆறு அணிகள் பங்கேற்கும் இத்தொடரின் குழு ஏயின் இவ்விரண்டு அணிகள் தவிர இந்தியா இடம்பெற்றுள்ளதோடு, குழு பியில் நடப்புச் சம்பியன்களான இலங்கையுடன் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகியன இடம்பெற்றுள்ளனர்.



குழுப் போட்டிகளில் தமது குழுவிலுள்ள ஏனைய அணியுடன் ஒரு முறை மோதி குழுவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறி அதில் முதலிரண்டு இடங்களையும் பெறும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறவுள்ளன.

பாகிஸ்தானில் நான்கு போட்டிகளும், இலங்கையில் ஒன்பது போட்டிகளும் நடைபெறவுள்ள இத்தொடரில் இலங்கையணியானது காயம் காரணமாக துஷ்மந்த சமீர, வனிடு ஹஸரங்க, லஹிரு குமார, டில்ஷான் மதுஷங்க ஆகியோரை இழந்துள்ளமை பின்னடைவாகக் காணப்படுகிறது. தவிர, துடுப்பாட்டமானது பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் ஜஸ்பிரிட் பும்ரா, பிரசீத் கிருஷ்ணா, ஷ்ரேயாஸ் ஐயர், லோகேஷ் ராகுலின் மீள்வருகையானது நம்பிக்கையளித்தாலும் கிருஷ்ணா, மொஹமட் சிராஜ், குல்தீப் யாதவ் போன்ற அதிரடியாகத் துடுப்பெடுத்தாட முடியாத வீரர்களை பின்வரிசையில் கொண்டிருப்பது முன்வரிசை வீரர்களுக்கு அழுத்தத்தை வழங்குகின்றது.

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் அனைத்து அணிகளுக்கும் சவாலளிக்கக் கூடிய அணியாகத் தோன்றுகின்றபோதும் அவ்வணியின் மத்தியவரிசை கவனம் பெறுகின்றது.

ஷகிப் அல் ஹஸன், மெஹிடி ஹஸன் மிராஸ் போன்ற சகலதுறைவீரர்களைக் கொண்டுள்ள பங்களாதேஷ் மேலதிகமாக துடுப்பாட்டவீரரையா அல்லது பந்துவீச்சாளரையா சேர்ப்பது என்பதில் தடுமாற்றத்தைக் கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணியின் ரஷீட் கான், முஜீப் உர் ரஹ்மான் போன்றவர்கள் உள்ளபோதும் முக்கிய தருணங்களில் கோட்டை விடுகின்றமையை திருத்திக் கொண்டாலே அவ்வணி மேலும் முன்னேற வாய்ப்புக் காணப்படுகின்றது.

இம்முறையுடன் 16ஆவது தடவையாக ஆசியக் கிண்ணம் இடம்பெறுகின்ற நிலையில் அதிகபட்சமாக இந்தியா ஏழு தடவைகள் வென்றுள்ளது.



நிந்தவூர் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில்

# அல் அதான் வித்தியாலயம் பிரகாசிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹிம்

நிந்தவூர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் விளையாட்டுப் போட்டியில் அல் அதான் வித்தியாலயத்தின் தரம் 3 ஆண்கள் பிரிவில், தரம் 5ஆண்கள் பிரிவில், தரம் 4 பெண்கள் பிரிவில், தரம் 5 பெண்கள் பிரிவில் முதலாம் இடங்களையும், தரம் 4 ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்று பிரகாசித்துள்ளது.

டயலொக் பாடசாலைகள் றக்பி விலகல் முறையிலான தொடர்:


# அரையிறுதியில் சென். ஜோசப் கல்லூரி

டயலொக் பாடசாலைகள் றக்பி விலகல் முறையிலான தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சென். ஜோசப் கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

ஹவ்லொக் பார்க்கில் அண்மையில் நடைபெற்ற சென். அந்தனிஸ் கல்லூரியுடனான மூன்றாவது காலிறுதிப் போட்டியில் 57-0 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்கு சென். ஜோசப் கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, இரண்டாவது காலிறுதிப் போட்டியில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியை வென்று சாஹிராக் கல்லூரி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

# றோமா செல்வதை நெருங்கும் லுக்காக்கு



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவில், இப்பருவகாலம் முழுவதும் கடனடிப்படையில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்களவீரர் றொமெலு லுக்காக்கு இணையவுள்ளார்.

செல்சிக்கு இதற்கு எட்டு மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை றோமா செலுத்தவுள்ளதுடன், 30 வயதான லுக்காக்குவின் ஊதியத்தையும் செலுத்தவுள்ளது.

மாகாணம், தேசியத்தில் வெற்றி பெற்ற

# அக்குரணை அல் அஸ்ஹர் பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

தேசிய ஒலிம்பியாட் போட்டி, மத்திய மாகாண 17 மற்றும் 20 வயதுக்குட்பட்ட கரம் சுற்றுப் போட்டி,20 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்டம், குத்துச்சண்டை, குருணாகல, கண்டி மாவட்ட கூடைப்பந்தாட்டம் ஆகியவற்றில் பங்கேற்று வெற்றிபெற்ற அக்குரண அல் அஸ்ஹர் பாடசாலை மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது அண்மையில் நடைபெற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 30 ஒகஸ்ட் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.